DINAKARAN 10 DEC 2007

# சுற்றுச்சூழல் காக்க எம்.எல்.ஏ. அழைப்பு

ஈரோடு, டிச. 10: ஈஷா யோகா மையம் சார்பில் மரக்கன்றுகள் வழங்கும் விழா கொங்கு கலையரங்கில் நடந்தது.

ஈஷா யோகா துவங்கி 25ம் ஆண்டு துவங்குவதையொட்டி தமிழகம் முழுவதும் இரண்டரை கோடி மரக்கன்றுகளை பசுமைக்கரங்கள் திட்டம் மூலமாக பொதுமக்கள் மூலமாகவும், ஈஷா யோகா மையத்தின் மூலமாகவும் நடும் பணி நடந்து வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் மட்டும் சுமார் 10 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு திட்டமிடப்பட்டு அப்பணிகள் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்நிலையில் சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் ஈரோடு கொங்கு கலையரங்கில் பொதுமக்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் விழா நடந்தது.

விழாவில் கோபி கிளை தலைவர் அருணகிரி வரவேற்றார். நகராட்சி தலைவர் குமார்முருகேஷ் தலைமை வகித்தார்.

மொடக்குறிச்சி எம்.எல்.ஏ., ஆர்.எம். பழனிசாமி கலந்து கொண்டு பொதுமக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி பேசுகையில், சுற்றுச்சூழலை காக்கும் பொறுப்பு அரசுக்கு மட்டுமின்றி பொதுமக்களுக்கும் உள்ளது என்பதை உணர்த்தும் வகையில் மரக்கன்றுகளை பொதுமக்களிடமே வழங்கி அவற்றை வளர்க்கும் பொறுப்பை ஈஷாயோகா மையம் செய்து வருகிறது. தற்போது காற்று, நீர், நிலம் என பல்வேறு காரணிகளும் தொடர்ந்து மாசுபட்டு வருகிறது. குறிப்பாக காவிரி ஆற்றில் கலக்கும் ரசாயண கழிவுகள், ஆலைக்கழிவுகள், சாயக்கழிவுகளால் தொடர்ந்து ஆற்றுநீர் மாசுபட்டு வருகிறது. இதை தடுக்க பலவிதமான முயற்சிகளை அரசு எடுத்துவந்தாலும் தொடர்ந்து கழிவுகள் கலப்பது தொடர்ந்து கொண்டுதான் உள்ளது. காவிரி ஆற்றில் கலக்கும் கழிவு நீரை தடுக்க உரிய நடவடிக்கையை அரசு எடுக்காவிடில் எதிர்காலத்தில் காவிரி ஆற்று நீர் இன்னொரு நொய்யல் நதியாக மாறி விடும் அபாயம் உள்ளது. அது போன்ற சூழ்நிலை ஏற்பட்டால் காவிரி ஆற்றை நம்பியுள்ள டெல்டா விவசாயிகள் மட்டுமின்றி குடிநீர் கூட கிடைக்காத அவலம் ஏற்படும் வாய்ப்புள்ளது. எனவே காவிரி ஆற்றில் மாசு கலப்பதை தடுப்பதற்கு இப்போதிருந்தே அரசு விரிவான திட்டம் ஒன்றை தயாரிக்க வேண்டும். இவ்வாறு பேசினார்.

விழாவில் சேகர் திட்ட விளக்க உரையாற்றினார். விழாவில் பங்கேற்ற மக்களுக்கு நீர்மருது, கொய்யா, தேக்கு, பலா, குமிழ், பூவரசு மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட்டது. மேலும் பசுமைக்கரங்கள் தொடர்பாக அனைத்து கல்லூரிகளுக்கு இடையே கலை நிகழ்ச்சி போட்டிகளும், அதை தொடர்ந்த மாணவர்களுக்கு சான்றிதழ்களும், வெற்றி பெற்ற கல்லூரிக்கு சான்றிதழும் வழங்கப்பட்டது. பசுமை கரங்கள் சம்மந்தமான கண்காட்சியும் நடந்தது.